பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் சிறுநூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 20 சனிக்கிழமை (04-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 39

## இலங்கைக் கடற் படையினரின்

# தமிழக மீனவர் மீதான தாக்குதல்; முதல்வர் கருணாநிதி எச்சரிக்கை!

## பின்விளைவுகள் பாரதூரமானதாம்

சென்னை, ஜனவரி 4

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்துவார்களானால் அதனால் பாரதூரமான பக்க விளைவுகள் உண்டாகும் என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி எச்சரித்திருக்கின்றார்.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை நிறுத்துமாறு இலங்கை அரசிடம் உறுதியாகப் பேசுமாறு தாம் பிரதமர் தேவகௌடாவிடமும், வெளியுறவு அமைச்சர் ஐ.கே. குஜ்ராலிடமும் வலியுறுத்தியுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர். சமீப காலத்தில் கடற்படையினரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

தாக்குதல்களின் போது மீனவர்கள் மரணமாகும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இதனை ஆட்சேபித்து தமிழக மீனவர்கள் பல தடவைகள் எதிர்ப்பு இயக்கங்களை நடத்தினர்.

எனினும் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்கள் நிற்கவில்லை. பதிலாக மேலும் அதிகரித்தன.

அதனால் இராமேஸ்வரத்தில் 500 மீனவர்கள் நேற்று முன்தினம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

இது குறித்துச் செய்தியாளர்கள் முதலமைச்சர் கருணாநிதியிடம் கேட்டனர். அப்போதே அவர் முன்கண்டவாறு இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர். சமீப காலத்தில் பல மீனவர்கள் இத் தாக்குதல்களில் இறந்துள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### வெட்டுப்புள்ளி வெளியானது

கொழும்பு, ஜன. 4

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான வெட்டுப்புள்ளி விவரம் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டது.

முன்கொண்டு கிடைத்த சில துறைகளுக்கான வெட்டுப்புள்ளி விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம்

மருத்துவம் - 280,
கலை — 261,
சட்டக்கலை — 271.

கொழும்பு

மருத்துவம் — 285,
கலை — 253,
சட்டக்கலை — 284.

(இ-3)

### 3 பொலீஸ் அதிகாரிகள் மன்னாரில் காயம்

மன்னார் பொலீஸ் இணைப்புப்பிரிவைச் சேர்ந்த மூன்று பொலீஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காயமடைந்தனர்.

கடமை முடிந்து திரும்பிக் கொண்டிருந்த இந்த பொலீஸ் அதிகாரிகள் மீது புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர் என்றும்—

கடும் காயங்களுக்குள்ளான அவர்கள் மன்னார் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-4)

### மறவன்புலோவில் 2 படையினர் பலி

கொழும்பு, ஜன. 4

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மறவன்புலோவில் மறைந்திருந்த பாதுகாப்புப்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட இத்தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் இறந்தனர் என அறிவிக்கப்படுகிறது.

(இ-3)

### வெற்றி என்கிறார் தளுவத்த

கொழும்பு, ஜன. 4

''தற்போது கிழக்கில் மேற்கொள்ளப்படும் 'றிவி ஜெய' இராணுவ நடவடிக்கை வெற்றியளித்துள்ளது. இதைத் தொடர்ந்து புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப் படும்.''

இராணுவத் தளபதி றோகான் தளுவத்த இப்படித் தெரிவித்தார்.

மகாஓயா நெடுஞ்சாலையைப் பாதுகாப்பதே தற்போது படை நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

### ஆயித்திய மலை பகுதியில் மோதல்

கொழும்பு, ஜன. 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயித்திய மலையில் ரோந்துசென்ற படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

புலிகள் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## யாழ். நகரப் பகுதி வீதிகளில் மரங்கள், கொப்புகள் தறிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ்.மாநகர சபைப்பகுதியில் உள்ள இடங்களிலும் வீதியோர மரங்களும், மரக் கொப்புகளும் நேற்று அவசர அவசரமாக வெட்டப்பட்டன.

மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பல வீதிகளில் மரங்களையும் கொப்புகளையும் மாநகரசபை ஊழியர்கள் வெட்டுவதை அவதானிக்க முடிந்தது.

படையினரின் உத்தரவின் பேரிலேயே மரம், மரக் கொப்புகளைத்தறித்து அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை முகாம் செய்திக்காக

## கைதான செய்திப் பணிப்பாளர் நீதிமன்றத்தில் ஆஜரானார்

கொழும்பு, ஜன. 4

வெல்லாவெளி விசேட அதிரடிப்படை முகாமை விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும், அந்த முகாம் அப்புறப் படுத்தப்பட்டதாகவும் —

செய்தி ஒலிபரப்பியதற்காகக் கைது செய்யப்பட்ட ரி.என்.எல். தொலைக்காட்சி சேவையின் செய்திப் பணிப்பாளர் இஷினி விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் நீதிமன்றில் பிரசன்னமானார்.

இஷினி விக்கிரமசிங்கா மீது மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெறுமாறு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான் இரகசியப் பொலீஸாரைப் பணித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப கலைஞரும் களத்தில இறங்கிறார் போல!

## ஜெயலலிதா நேற்று பிணையில் விடுதலை

சென்னை, ஜன. 4

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று மாலை சென்னை மத்திய சிறையிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரை வரவேற்க ஏராளமான மக்கள் குழுமியிருந்தார்கள்.

எனினும் அவரது வழக்கறிஞர் பி.எச். பாண்டியன் [illegible] சென்று அவரை எதிர் கொள்ள அனுமதிக்கப் பட்டார்.

முன்னதாக நேற்றுக்காலை செல்வி ஜெயலலிதாவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் இரண்டு வழக்குகளில் பிணை அனுமதி வழங்கியது.

நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கிலும் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேகரித்ததாகக் கூறப்பட்ட வழக்கிலும் பிணை அனுமதி வழங்கி நீதிபதி ரங்கசாமி தீர்ப்பளித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தி

வடபகுதியில் தொலைத் தொடர்பு சேவைகள் 200 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட இருப்பதாகவும் —

தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களின் ஆற்றலை விரிவு படுத்துவதற்கு புதிய நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

## காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு தலைவராக சீதாராம்கேசரி

### ஏகமனதாகத் தெரிவானார்

புதுடில்லி, ஜன. 4

காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சீதாராம் கேசரி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று புதுடில்லியில் பிரத்தியேகமாகக் கூட்டப்பட்ட காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அவரது பெயரை சரத்பவார், பிரணாப் முகர்ஜி உள்ளிட்ட பலரும் முன்மொழிந்தனர்.

நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் கட்சியின் மூத்த தலைவர் ஜி. வெங்கடசாமி தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. பி. நரசிம்மராவ் உட்பட பல முக்கிய தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

தலைவர் பதவிக்கு [illegible] போட்டியிடவில்லை என்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை

(நெல்லியடி உடுப்பிட்டி உப அலுவலகங்கள்)

### 1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேச சபைகள் சட்டம்

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1997 ஆம் ஆண்டுக்கான ஆதனவரிக்கான மதிப்பீடுகள் ஆதனவரிஅறவீட்டு விகிதமும் இவ்வாண்டுள்ளவாறே மாற்றமின்றி இருக்கும். 1997 ஆம் ஆண்டு முழுவதற்கும் உரிய வரித்தொகையை ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு 10% கழிவும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி 31, ஏப்ரல் 30, ஜூலை 31, ஒக்ரோபர் 31 க்கு முன்னர் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் சுந்தாயங்களுக்கான வரி முறையே 31-03-1997, 30-06-1997, 30-09-1997, 31-12-1997 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தத்தவறுமிடத்து குடியிருப்பு ஆதனங்கள் மீது பற்றாணைக் கட்டணமாக 15% உம் வியாபார நோக்கத்திற்குப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20% உம் அறவிடப்படும்.

இவ்வரி விதிப்புக்கு எதிரான முறைப்பாடுகளை 31-01-1997 வரை சபைக்கு அறிவிக்கவும். ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது. ஆதனத்தின் உரிமையாளர்களும் அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

**செ. ஸ்ரீநிவாசன்,**
**விசேட ஆணையாளர்.**

வடமராட்சி தெ. மே. பிரதேச சபை.
30—12—1996. (சி/3857)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி தயாநிதி சடாட்சரம்
அவர்களின் தந்தையார்

### திரு. சின்னத்தம்பி சடாட்சரம்

அவர்கள் 30-12-96 அன்று கொழும்பில் காலமானதறிந்து அதிர்ச்சியுற்றுள்ளோம். அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கும் அதே வேளை அவரது ஆத்மா சாந்தியடையவும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/கைதடி நாவற்குழி அ.த.க.பா.**

கைதடி நாவற்குழி,
கைதடி. (சி/3858)

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின்
ஆயுள்வேத மருத்துவ டாக்டர்
**திருமதி தவமலர் சிவரத்தினத்தின்**
தந்தையார்

### சின்னப்பு சிவக்கொழுந்து

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள்,**
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை.

(சி/3856)

## நூல் வெளியீட்டு விழா

வடமராட்சி, ஜன. 4

வடமராட்சி றோட்டரக் கழகம் பருத்தித்துறை அறிவோர் கூடல் ஆதரவில் நடத்தும் இர. சந்திரசேகர சர்மாவின் விஞ்ஞான, விவசாய நூலான களைகள் வெளியீட்டு விழா நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கட்டட மேல் மாடியில் நடைபெறும்.

இவ் விழாவில் சுவாமி சித்ரூபானந்தா ஆசியுரையும், யாழ். றோட்டறிக் கழக செயலாளர் க. கமலசேகரம் அறிமுகவுரையும் நிகழ்த்துவார்கள்.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் கலந்து கொண்டு உரையாற்றுவார். நூல் வெளியீட்டுரையைபருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் வி.எஸ். குணசீலன் ஆற்றுவார். (இ-173)

## வாழைக் குலை திருட்டு

நவாலி, ஜன. 4

நவாலிப் பகுதியில் வாழைக் குலைகள் பழுக்க முன்னரே இரவு வேளையில் திருடர்களால் வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன.

கசிப்பு காய்ச்சுவதற்கு இவை பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. (இ-100)

## ஓய்வு பெற 61 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ். போதனா வைத்திய சாலையில் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்காக சுமார் 61 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## நோயாளருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ், போதனா வைத்திய சாலை கட்டட புனரமைப்புப் பணியில் தற்போது ஈடுபட்டிருக்கும் கட்டடத் திணைக்களத்தினர் புது வருடத்தை முன்னிட்டு, யாழ். போதனா வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உடுபுடைவை, படுக்கைவிரிப்பு போன்ற பொருள்களை அன்பளிப்பாக வழங்கினர்.

வறுமைக்கோட்டின் கீழுள்ள நோயாளர்களுக்கே இந்த அன்பளிப்புகள்வழங்கப்பட்டன.

இதற்கான அன்பளிப்புத் தொகையை வெளிநாட்டில் வேலை செய்யும் தனிநபர் ஒருவரே கட்டடத் திணைக்களப் பொறுப்பதிகாரியிடம் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## மரண அறிவித்தல்கள்

### நவரெட்ணம் பத்மநாதன்

யாழ்ப்பாணம், பலாலி வீதி, இல. 19, இரண்டாம் ஒழுங்கையில் வசித்தவராகிய நவரெட்ணம் பத்மநாதன் கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரெட்ணம் மற்றும் பாக்கியத்தின் அன்பு மகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், வத்சலா (நோர்வே), அரவிந் (ஜேர்மனி), சசிகலா, தர்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற நகுலாதேவி மற்றும் விமலாதேவி, செல்வநாதன், கமலநாதன், யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சுந்தரலிங்கம் (கனடா), பஞ்சாட்சரலிங்கம் (கமலேஸ்வரி களஞ்சியம்), மகேந்திரலிங்கம், ஜெகதீஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2-1-97 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**பஞ்சாட்சரலிங்கம்**
(மைத்துனர்).

இல 84, கல்லூரி வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு—13. (44493)

### திருமதி கனகம்மா குமாரசிங்கம்

திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி கனகம்மா குமாரசிங்கம் அவர்கள் 03 - 01 - 97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குமாரசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்தையா சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், அரசரட்ணம் (ஜேர்மனி), ஜெயரட்ணம், குணரட்ணம், பத்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும். விஜயலட்சுமி (ஜேர்மனி), சாந்தி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், வினுஷியா (ஜேர்மனி), அனுஷாந்தன், நிர்மலன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பாக்கியம், சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03-01-97) பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பத்மினி** (மகள்)

காளிகோயிலடி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம். (44478)

### அன்ரன் ராஜ்குமார்

(விவசாயத்துறை உத்தியோகத்தர், கச்சேரி, கிளிநொச்சி; பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி [B.sc])

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மாங்குளத்தில் வசித்தவருமான அன்ரன் ராஜ்குமார் (விவசாயத்துறை உத்தியோகத்தர்) 31 - 12 – 96 அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பி. மரியாம்பிள்ளை B. A. (Lond.) (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) — பொன்னம்மா தம்பதியினரின் அருமைப் புதல்வனும், மேசியின் அன்புக் கணவரும், றோசானியின் அன்புத் தந்தையும், யூலியஸ் மரியதாஸ் (தொலைத் தொடர்பு பரிசோதகர், ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்), எட்வேட் செல்வமகள் (டாக்டர், கனடா), யஸ்ரின் சிறில் (ஜேர்மனி), செல்வமணி விஜயகுமார், றெஜினா மலர் துரைராஜசிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (02 - 01 - 97) மாங்குளத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**யூலியஸ் மரியதாஸ்**
(சகோதரர்)

34, கண்டிறோட்,
யாழ்ப்பாணம்.

### நாகநாதர் இரத்தினம்

(உதயன் முகவர், கோப்பாய்)

நாகநாதர் இரத்தினம் 02.01.1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் (ஆசிரியை) அன்புக் கணவரும் நாளாஜினி, சிறிகாந்தி, மனோகரன் (மனோலைட், கோப்பாய்), பிரபாகரன், சுவேந்திரினி (மிருசுவில் அரசினர் வைத்தியசாலை), ஆகியோரின் தந்தையும் துரைராசா, கதிரவேலு, அருள்மொழி (லைலா), வசந்தராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜனி (பரிஸ்), காந்தரூபன் (சிங்கப்பூர்), பிரியதர்சினி, பிரபாஜினி, அனுசன், சாருஜன், பிரியதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், அ[illegible] (பரிஸ்) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2.1.97 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**இ. மனோகரன்**
(மகன்)

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (சி/3854)

## திருமண வரவேற்புபசார வைபவம்

**மணமகன்- சிவப்பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக்குருக்கள்**
(கந்தவனம் தேவஸ்தானம், ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் பிரதமகுரு)

**மணமகள்- திருமதி வை. சிவலோகதயாபரி அம்பாள் B. A.**
(ஆசிரியை, முல்லைத்தீவு மகா வித்தியாலயம்)

**காலம்: 05 - 01 - 1997 ஞாயிற்றுக்கிழமை**
**இடம்: பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.**
**நேரம்: பிற்பகல் 2.00 மணி**

இவ்விழாவினை சிறப்பாக நடத்துவதற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை,
அம்பாள் சனசமூக நிலையம், பொலிகண்டி மக்கள்.

(44495)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் கள நிலவரங்கள் இந்த ஆண்டு பெரும் அளவில் மாற்றமடையப் போகின்றன!

## முழுக்க கெரில்லா யுத்த தந்திர அடிப்படையிலேயே புலிகளின் நகர்வு

அம்பாறை மாவட்டத்தில் விசேஷ அதிரடிப்படை முகாம்மீது புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து படையினர் ''பாடும் மீன்'' நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

மீன் பாடத் தொடங்க முன்னரே புலிகள் தமது கெரில்லா பிரதேசங்களில் இருந்து வெளியேறிச் சென்று விட்டனர்.

தாக்குதல் நடவடிக்கை ஒன்றில் புலிகள் ஈடுபட்ட பின்னர், பதிலடி நடவடிக்கையில் படையினர் குதிப்பர் என்றே எதிர்பார்ப்பார்கள்.

கிழக்கில் புலிகள் விரும்புவது நேரடி மோதல்களை யல்ல: தமக்குச் சாதகமான சண்டை முனைகளில் போரிடவே புலிகள் விரும்புகின்றனர்.

கிழக்கில் புலிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் பெரும் நிலப்பகுதிகளில் படையினர் பரவலாக நிலை கொண்டிருக்க வேண்டும்.

அவ்வாறு நிலை கொண்டிருப்பதற்கு பெருந் தொகையான படையினர் தேவைப்படுவர். குறைந்தது 500 படையினராவது ஒவ்வொரு முகாமிலும் இருக்க வேண்டும். முகாம்களிற்கிடையே தொடர்புகள் இருக்கக் கூடிய வகையில் தொடர்ச்சியான இராணுவ வேலியாக முகாம்கள் நிறுவப்பட வேண்டியிருக்கும்-

இல்லாவிட்டால் புலிகளின் கெரில்லாத் தாக்குதலுக்கு இலக்காக வேண்டி வரும்.

### புலிகளின் பலம்

ஆட்பல ரீதியிலும், ஆயுத பல ரீதியிலும், கிழக்கில் புலிகளின் பலம் உயர்ந்துள்ளது.

சொர்ணம், கருணா, ராம் போன்ற முக்கிய தளபதிகளை கிழக்குக்கு பிரபாகரன் அனுப்பி வைத்திருக்கிறார்.

முழுக்க முழுக்க கெரில்லா யுத்த தந்திரத்தின் அடிப்படையிலேயே கிழக்கு மாகாணத்தில் புலிகளின் இராணுவ நகர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

கிழக்கில் படையினர் இல்லாத பகுதிகளில் புலிகள் நிர்வாகம் நடத்துகிறார்கள். அலுவலகங்களை வைத்திருக்கிறார்கள்.

ஆனால் அவை கெரில்லா பிரதேசங்களே தவிர, நிரந்தரமான தளப்பிரதேசங்கள் அல்ல.

முன்னர் யாழ்ப்பாணத்திலும், இப்போது வன்னியிலும் புலிகள் தளப்பிரதேசத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

தளப் பிரதேசத்துக்கும், கெரில்லாப் பிரதேசத்துக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.

போருக்கான விநியோகம், கட்டளைகள், திட்டமிடல்கள் போன்றவை தளப்பிரதேசத்தில் இருந்தே மேற்கொள்ளப்படும்.

தளப்பிரதேசத்தைப் பாதுகாக்க நிரந்தரப் படையணியும் இருக்கும். அதனால் குறிப்பிட்ட தளப்பிரதேசத்தை கைப்பற்றுவதற்கு மறுதரப்பு கடுமையாகப் போராட வேண்டியிருக்கும்.

புலிகளின் வன்னித் தளத்தை படையினர் கைப்பற்றுவதானால் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும். சுலபமாக தளப் பிரதேசம் வீழாது.

யாழ். குடாநாடு புலிகளின் தளப்பிரதேசமாக இருந்தபோது அதனையும் சுலபமாகக் கைப்பற்ற முடியவில்லை. படைபல குவிப்பு மூலமும், அதிகளவிலான கனரக ஆயுதப் பிரயோகங்கள் மூலமும் மூர்க்கத்தனமான பலப்பிரயோகம் மூலமுமாகவே யாழ்.குடாநாட்டை படையினர் கைப்பற்ற முடிந்தது.

மறுதரப்பின் படைபலம் தம்மைவிடப் பலமடங்கு மேலோங்கிய நிலையில்தான் தளப்பிரதேசத்தை கைவிட்டு புலிகள் பின்வாங்கினார்கள்.

அதாவது தளப்பிரதேசங்களும் மாறக் கூடியவை. ஆனால் அடிக்கடி மாறிக் கொண்டிருக்காது. குறிப்பிட்ட காலகட்டத்திற்காவது தளப்பிரதேசத்தைப் பாதுகாக்கும் படைவலிமை உள்ள போதுதான் தளப் பிரதேசம் உருவாகிறது.

யாழ். குடாநாடு படையினர் வசம் சென்ற பின்னரும், அங்கு படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் புலிகள் இருக்கிறார்கள்.

இரண்டுவிதமாக புலிகளின் செயற்பாடு அங்கு காணப்படுகிறது.

1. நடமாடும் கெரிலாக்கள்.
2. தற்காலிக கெரில்லா பிரதேசங்கள்.

> கொழும்பிலிருந்து வெளிவரும் "தினமுரசு" வார இதழில் "பாடாத மீன்களும் பாடப்போகும் துப்பாக்கிகளும்" என்ற தலைப்பில் "நாரதர்" எழுதிய "எக்ஸ்ரே ரிப்போர்ட்" இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.

### கெரில்லா அணிகளின் தந்திரம்

ஓர் இடத்தில் நிலையாகத் தங்கியிருக்காமல் தமது இருப்பிடங்களை கெரில்லாக்கள் மாற்றிக்கொண்டேஇருப்பார்கள். திடீரென்று தோன்றித் தாக்குதல் நடத்திவிட்டு மறைந்து விடுவார்கள். அதுதான் நடமாடும் கெரில்லா அணிகளின் தந்திரம்.

சில பகுதிகளில் முகாம்களை அமைத்து கெரில்லாக்கள் தங்கியிருப்பர். படையினர் முன்னேறி வருவதாகத் தெரிந்தால் முகாம்களைக் கைவிட்டு தப்பிச் சென்று விடுவர். அந்தப் பகுதிகள் கெரில்லாப் பிரதேசங்கள் என்று அழைக்கப்படும்.

யாழ். குடாநாட்டில் பெரும்பாலும் நடமாடும் கெரில்லாக் குழுக்களாகவே புலிகளின் அணிகள் இயங்கி வருகின்றன.

சில பகுதிகளில் பகலில் படையினர், இரவில் புலிகள் என்ற நிலை காணப்படுகிறது.

கிழக்கு மாகாணத்திலும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் பலவற்றில் இரவில் புலிகளின் கெரிலாக்கள் நடமாடுகின்றனர்.

அதேவேளையில், படையினர் சுலபமாக, அல்லது குறைந்த பலத்தோடு முன்னேறிச் செல்ல முடியாத பகுதிகளை புலிகள் தமது கெரில்லாப் பிரதேசங்களாக மாற்றிக் கொள்கின்றனர்.

எப்போதும் கைவிட்டுச் செல்லக்கூடிய நிலையில்தான் கெரில்லாப் பிரதேசத்தில் உள்ள அணிகளின் செயற்பாடுகள் அமைந்திருக்கும்.

படையினர் பலத்தோடு முன்னேறும் போது கெரில்லாப் பிரதேசத்தை கைவிட்டுச் செல்வது; படையினர் திரும்பிச் சென்ற பின்னர் மீண்டும் அங்கு வருவது என்பது தான் புலிகளின் நடைமுறையாக இருக்கும்.

எனவே கிழக்கில் புலிகளின் கெரில்லாப் பிரதேசங்களுக்குத் தாம் சென்று திரும்பி வருவதை புலிகளைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையாக படையினர் சித்திரிப்பது சரியாக இருக்காது.

புலிகளின் கெரில்லா தளப் பிரதேசங்களை படையினர் கைப்பற்றி நிலை கொண்டிருந்தால்தான் இராணுவரீதியில் தமது பலத்தை விஸ்தரித்துள்ளனர் என்று கருத முடியும்.

புலிகளின் தளம் நோக்கி படையினர் நகர்வு என்றே செய்திகள் வெளியிடப்படுகின்றன. தளமும் கெரில்லாத் தளப்பிரதேசமும் இராணுவரீதியில் வெவ்வேறானவை. பலம், பலவீனம் தொடர்பாக வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்டிருப்பவை.

கெரில்லாத் தளப்பிரதேசம் என்பதின் முக்கிய குணாம்சமே அடிக்கடி கைமாறிக் கொண்டிருக்கும் என்பதுதான்.

புலிகள் வடக்கில் ஒரு பலமான, பரந்த தளப்பிரதேசத்தையும், கிழக்கில் பகுதி பகுதியாக பரவலான கெரில்லா தளப்பிரதேசங்களையும் கொண்டிருக்கின்றனர்.

கடந்த பதின்மூன்று வருடகால யுத்தத்தில் தமது தளப்பிரதேசத்தை இரண்டு தடவைகள் புலிகள் மாற்றிக் கொண்டனர்.

இந்தியப் படை காலத்தில் ஒரு தடவையும், சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் பின்னரும் யாழ். தளப்பிரதேசம் புலிகளிடம் இருந்து கைமாறியிருக்கிறது.

அதனால்தான் யாழ்.குடாநாட்டை படையினர் கைப்பற்றியமை இராணுவரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. தமக்கு அது ஒரு 'தற்காலிகப் பின்னடைவே' என்று பிரபாகரனும் கூறியிருக்கிறார்.

கிழக்கின் பூகோள நிலைமைகள் காரணமாக அங்கு ஒரு நிரந்தரத் தளப்பிரதேசத்தை வைத்திருப்பது புலிகளுக்கு உடனடிச் சாத்தியமில்லை.

அதுமட்டுமல்லாமல் படையினராலும் புலிகளின் கெரில்லாப் பிரதேசங்களைக் கைப்பற்றி நிரந்தரமாக நிலைகொள்ள முடியாது.

எனவே சண்டையிட்டு தமது கெரில்லாப் பிரதேசங்களைப் பாதுகாப்பதைவிட, படையினர் வந்துவிட்டுச் செல்லட்டும் என்று விட்டுவிடுவது புலிகளுக்கு இலாபமாக இருக்கிறது.

அதன் மூலம் தமது அணிகளையும் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

### புளுக்குனாவ தாக்குதல்

புளுக்குனாவ விசேட அதிரடிப்படை முகாம் மீதான தாக்குதல் படையினருக்கு மட்டுமல்லாமல், அரசாங்கத்திற்கும் சங்கடங்களை ஏற்படுத்தியிருந்தது.

''வடக்கைப் பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டு கிழக்கைப் பறிகொடுக்கிறார்கள்'' என்று எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

''வடக்கைக் கைப்பற்றத்தான் கிழக்கை தந்திரோபாயமாக விட்டுக் கொடுத்திருக்கிறோம்'' என்று அரசாங்கம் சொல்லி வந்தது.

கிழக்கில் [illegible] புலிகளால் தாக்குதல் நடத்த முடியும் என்று அரசாங்கம் கருதியிருக்கவில்லை.

ரோந்து அணிகள் மீதும், எல்லைக் கிராமங்கள் மீதும் தான் தாக்குதல் நடத்துவார்கள்; அவற்றை புலிகளின் திசை திருப்பல் நடவடிக்கை என்று மக்களும் புரிந்து கொள்வர் என்றே அரசாங்கம் நினைத்திருந்தது.

புளுக்குனாவ தாக்குதல் எதிர்ப்பாராத அதிர்ச்சியாக அமைந்துவிட்டது. அதனை புலிகளின் இயலாமையின் வெளிப்பாடாகவும், திசை திருப்பும் தந்திரமாகவும் சித்திரிக்க முடியாமல் போய்விட்டது.

'பாடும் மீன்' நடவடிக்கை மூலமாக புலிகளை துரத்தித் தாக்கும் பலம் தம்மிடம் உண்டு என்று படையினர் நிரூபிக்க முற்பட்டனர்.

''புலிகள் தங்கள் இடங்களைவிட்டுத் தப்பி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று அரசாங்க பிரசார சாதனங்கள் செய்தி வெளியிட்டன.

உண்மையும் அதுதான். படையினர் வருவதாகத் தெரிந்ததும் புலிகள் ஓடத் தொடங்கி விட்டனர். ஆனால் விஷயம் என்னவென்றால் ஓடுவதும், ஒளிவதும், மறைந்திருந்து தாக்குவதுதான் கெரில்லாக்களின் குணாம்சம்.

ஓடாமல், ஒளியாமல் நேருக்கு நேர் நின்று மோதுவதாக இருந்தால் அது கொரில்லாக்களுக்கு அடுத்த படியானநிலை. நிரந்தரஇராணுவஅணியாக மாறிவிட்டார்கள்என்று அர்த்தம்.

நிரந்தர இராணுவ அணிகள் பின்வாங்கிச் செல்வதுதான் பின்னடைவு என்று கருதப்படும்.

யாழ். குடாநாட்டில் புலிகளின் நிரந்தரப் படையணிகளும் பின்வாங்கின. கிளிநொச்சி போர் முனையிலும் புலிகளின் மரபுப்போர்முறையும் கெரில்லா உத்தியும் கலந்த பதிலடி படையினரால் முறியடிக்கப்பட்டது. அதனையும் பின்னடைவு என்று கருதலாம்.

ஆனால், கெரில்லாக்கள் ஓடுவதும், ஒளிவதும் தந்திரமே தவிர, பின்னடைவு அல்ல.

எதிரியின் கைகளில் மாட்டாமல் நெளிவு சுழிவாக ஓடி தப்பிக்கத் தெரிந்தவர்களே உண்மையான கெரில்லாக்கள்.

ஆக, புலிகள் தப்பி ஓடிவிட்டார்கள் என்று படையினர் தெரிவிப்பது தெற்கில் பிரசாரரீதியில் அரசாங்கத்திற்கு உபயோகமாக இருக்கலாம். போர்த்தந்திர ரீதியில் நோக்கும்போது நேர் மாறான முடிவே கிடைக்கிறது. தமது எதிரிகள் தப்பிச் செல்லாதவாறு படையினரால் வியூகம் வகுக்க முடியவில்லை. கெரில்லாக்கள் மிக வேகமாக நழுவிச் செல்லக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

அது மட்டுமல்லாமல் ஓடுவதாகப் போக்குக் காட்டிக் கொண்டு, படையினரின் பின்புறமாகச் சென்று தாக்குதலும் நடத்தியிருக்கின்றனர்.

### உபாலி சஹபந்து

'பாடும் மீன்' நடவடிக்கையில் முன்வரிசையில் நின்று துடிப்போடு செயற்பட்டவர் விசேஷ அதிரடிப்படை அதிகாரியான உபாலி சஹபந்து.

படையினரை ஒழுங்குபடுத்தி களத்திற்கு அனுப்புவதில் முனைப்புடன் செயற்பட்டவர் அவர் தான்.

அவரது கவனம் முழுக்க 'பாடு மீன்' நடவடிக்கை மீதே இருந்தது. புலிகளின் கோட்டைக்குள் புலிகளை சந்தித்துப் பதிலடி கொடுப்பதுதான் அவரது முழுச் சிந்தனையாகவும் இருந்தது.

அதேநேரம் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புகுந்துவிட்ட கரும்புலி தனக்கு குறிவைத்துவிட்டதை அவர் அறியவில்லை.

புலிகளின் கவனமெல்லாம் தற்காப்பில் தான் இருக்கும் என்று படையினர் நினைத்துக் கொண்டிருக்க, படையினரது கட்டுப்பாட்டுப்பகுதியான கல்முனைக்கும், களுவாஞ்சிக்குடிக்கும் இடையில் வைத்து கரும்புலித் தாக்குதல் நடந்திருக்கிறது.

கொழும்பில் வைத்து கடற்படைத் தளபதி கிளன்ஸி பெர்னாண்டோமீது கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்ட பாணியில்தான் இத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வெடி மருந்தை நிரப்பிக் கொண்டு வந்த கரும்புலியே ஜீப்மீது மோதியிருக்கிறார். அவரது உடலிலும் வெடிகுண்டு கட்டப்பட்டு இருந்திருக்கலாம்.

ஜீப் முற்றாகச் சேதமடைந்ததுடன் சஹபந்துவும் அவருடன் சென்றவர்களும் பலியாகினர்.

அருகிலுள்ள கட்டடங்கள், மின்கம்பம் போன்றவையும் பாதிக்கப்படுமளவுக்கு வெடிமருந்து அதிகளவில் பாவிக்கப்பட்டிருக்கிறது.

'பாடும் மீன்' நடவடிக்கை தொடர்பான படையினரின் பிரசாரத்திலும் சஹபந்துவின் மீதான தாக்குதல் பின்னடைவை ஏற்படுத்தி விட்டது.

கிழக்கில் உள்ள விஷேச அதிரடிப் படையினர் தமது அதிகாரி பலியான பின்னர் பொது மக்கள் மீது தம் கோபத்தை திருப்பவில்லையென்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

சம்பவம் நடைபெற்ற பகுதியில் உள்ள மக்கள் அச்சத்துடனேயே இருந்தனர். வழக்கமாக இவ்வாறான தாக்குதல்கள் நடைபெற்றால் பாதிக்கப்பட்ட படையினரின் கோபத்திற்கு அப்பகுதியில் உள்ள மக்களே வடிகாலாக இருப்பதுண்டு.

அதிரடிப்படையினர் அவ்வாறு நடந்து கொள்ளாதது அப்பகுதி மக்களுக்கு ஆறுதலாக அமைந்துவிட்டது.

கரும்புலித் தாக்குதல் நடைபெற்ற பாதைவழியாகவே அம்பாறை மாவட்டத்துக்கு அமைச்சர் அஷ்ரப் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்வது வழக்கம்.

### அமைச்சர்களுக்கு உத்தரவு

இத்தாக்குதலின் பின்னர் கிழக்கு மாகாணத்திற்கு அமைச்சர்கள் உட்பட முக்கிய பிரமுகர்கள் விஜயம் செய்வதை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

அமைச்சர் அஷ்ரப்பையும் உடனடியாக கொழும்பு திரும்புமாறு ஜனாதிபதியிடமிருந்து அவசர உத்தரவு பறந்ததாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே யாழ். ஸ்ரான்லி வீதியில் கரும்புலித்தாக்குதல் நடைபெற்ற பின்னர் அங்கு முக்கிய அமைச்சர்கள் செல்வது நிறுத்தப்பட்டது.

சீருடை விநியோகிக்கச் செல்வதாக இருந்த கல்விய

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வினாத்தாள்கள்

அண்மையில் அரசாங்கத்தால் நடத்தப்பெற்ற O/L English வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகளுக்கு விசேட கழிவு. Bond, யாழ்ப்பாணம். (44350)

### இலவச திருமண சேவை

பட்டதாரி 33 வயது மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: ஞாயிறுமட்டும் 9.30 - 12.30 ஸ்ரீலங்காஅச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (44468)

### மணமக்கள் தேவை

கணக்காளர் வயது 34, ஆசிரியர் வயது 39, செவ்வாயுள்ள ஆசிரியை வயது 33, கனேடியப் பெண் வயது 30. பொருத்தமான மணமக்கள் தேவை. முத்துக்குமார் செல்லப்பா புன்னாலைக்கட்டுன். (44481)

இந்து, நற்குடும்பம், செவ்வாய்க் குற்றமுள்ளவர், வயது 29. சுவிசில் தொழில் புரிபவர். மணமகள் ஐரோப்பிய நாடொன்றில் வசித்தால் விரும்பத்தக்கது. வெளிநாடு செல்ல விரும்புபவர்களும் சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். மே/பா, இல. 573, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (44434)

### தேவை

இரண்டு வயதுக் குழந்தையை காலையிலிருந்து மாலை வரை பராமரிப்பதற்கு வண்ணார் பண்ணை எல்லைக்குள் வசிக்கும் பெண்பிள்ளை தேவை. [12—15 வயதுக்கு இடைப்பட்டோர் விரும்பத்தக்கது] சனி, ஞாயிறு நாள்களில் நேரில் வரவும். கு. விஜயகுமார், 319, கே. கே. எஸ் வீதி, [மனோகரா சந்திக்கு அருகில்]. (44464)

### தவறிவிட்டது

மாரிமுத்து சோமரத்தினம் ஆகிய எனது கார், மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் கறுப்புப் பையுடன் நல்லூர் மேற்கு வீதிக்கும் கலட்டிச் சந்திக்குமிடையில் 3-1-97 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கடிதமூலம் அறிவிக்கவும். பிடாரி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். சன்மானம் வழங்கப்படும். (44484)

மகேசன் சிவானந்தன் ஆகியநான் எனது கைப்பையையும், 372200472V இலக்கமுடைய அடையாள அட்டையையும் 30-12-96 இல் நெல்லியடி பொதுச்சந்தைப் பகுதியில் தவறவிட்டுவிட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ''செல்லமுத்து புடவைக்கடை'' நெல்லியடியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (44491)

### றோணியோ

சிறந்த முறையில் தமிழ், ஆங்கில தட்டெழுத்து மற்றும் றோணியோ வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப் படும். சென் ஜோன் பொஸ்கோ முன்பாக. (44470)

### ஆண்டு 6-11

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் முதலாம் தவணையில் உயர்ந்த பெறுபேறடைய வாரம் 5 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். London Inter ஆசிரியர். 85, சிவன் கோயிலடி, [சிவன் கோயில் மேற்கு வீதி] திருநெல்வேலி. (44489)

### மணமகன் தேவை

இந்து நற்குடும்பம், வயது 26, படித்த செவ்வாய்க் குற்றமுள்ள பெண்ணுக்கு உத்தியோக மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். மே/பா இல. 572, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (44433)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் மூன்று அறைகள், குசினி, ஹோல், அடிப்படை வசதிகளுடன் (விரைவில் மின்சாரமும்) வீடு வாடகைக்குண்டு. முற்பணம் அவசியம். ஞா. தவமலர், இல. 03, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (44476)

---

## விசேட பயிற்சி

பரீட்சைகளுடனான வகுப்புகள்

★ ஆண்டு -- 4

★ ஆண்டு -- 5 புலமைப்பரிசில்

ஆரம்பம்: 05-01-1997

**BOND கல்வி நிறுவனம்**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(44487)

---

## TINY TOTS' CORNER

CHAVAKACHCHERI.

## ரைனி ரொட்ஸ்' கோணர்

முன்பள்ளி கல்விக்கூடம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

**ஆரம்பம்: 06 - 01 - 1997**

★ உலகப் புகழ் பெற்ற Ravensburger (German) பாலர் கல்வி உபகரணங்கள்.

★ எண் மொழி விருத்திக்கான பிரத்தியேக பயிற்சிப் புத்தகங்கள்.

★ Rhymes and songs vol. 1

ஆகியவற்றை உபயோகித்து கற்பிக்கப்படும் ஒரே கல்விக் கூடம். புதிய அனுமதிகள் காலை 8-30 மணி முதல் ஏற்றுக் கொள்ளப்படும்.

-- இயக்குநர்

(44480)

---

## அறிவித்தல்

எமது நிறுவனத்தில் சேவை செய்வோர்

1) சந்திரசேகரன் ஜெரிமயா
2) தி. ஆனந்த நடேசன்
3) ப. குமரகுருபரன்
4) தே. பேர்னாட்
5) மு. ரஜனா
6) ந. ஜெயராணி
7) வி. சுமித்திரா

இவர்களைத் தவிர முன்னர் வேலை செய்தவர்களுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

நிர்வாகம்

**ரேஸ்ட்லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிரட்**

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (44443)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருமிகு. சி. மோ. சிவமயம் அவர்கள்

(கூட்டுறவுத் தலைமைக் காரியாலயப் பரிசோதகர்)

மன்னார் மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளதை அறிந்து அகமிக மகிழ்வதுடன், கூட்டுறவுப் பணியில் இவரின் எதிர்காலம் மேன்மேலும் துலங்கவும், நீடூழி வாழவும் எல்லாம் வல்ல இறையருளை வணங்கி உள்ளன்புடன் வாழ்த்துகின்றோம்.

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை
சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,
புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்
சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

(44486)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**99** கலை, வர்த்தகம்
புதியபிரிவு ஆரம்பம்: 5-1-97 (9-00 மணி)

**97** கணக்கியல் (பங்குடைமை)
திரு. பாலவாசன் (2-00 மணி)

**97,98** பொருளியல்
திரு. விக்கி (10-00 மணி)

(44467)

---

## NEW BECCON ACADEMY

யாழ். பரு. வீதி, ஆவரங்கால்.

## A/L 97, 98, 99

## கலை, வர்த்தகபிரிவுகள்

ஆரம்பம்: 06 - 01 - 1997 திங்கள்
பி. ப 4. 15 மணி

| | |
|---|---|
| பொருளியல்: | — S. K. ஸ்ரீரங்கநாதன் |
| கணக்கியல் | — K. தீபன் |
| வர்த்தகம் | — V. S. முகுந்தன் |
| இந்து நாகரிகம், இந்து சமயம் | — P. ஜோதீஸ்வரன் |
| வணிகப்புள்ளி விவர வியல் | — S. திரிகரன், V. தயாபரன் |
| தமிழ் | — P. அமரசிவம் |
| அளவையியல் | — திரு. நவம் |
| புவியியல் | — செல்வி நளினி, செல்வன் சிவதாசன் |
| நாடகமும் அரங்கியலும் | — பிரபல ஆசிரியர் |
| சரித்திரம் | — பிரபல ஆசிரியர் |

**ஆண்டு 5 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.**

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(44483) - நிர்வாகி

---

நல்லூர்ப் பிரதேச

## ஒய்வூதியர் நலன்புரிச் சங்கம்

## 14ஆவது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்

**காலம்: 19-01-97 ஞாயிற்றுக்கிழமை**
மு. ப. 10-00 மணி (புதிய நேரம்)

**இடம்: திருநெல்வேலி இ.த.க. பாடசாலை**
(சந்தையின் பின்பக்கம்)

சங்கத் தலைவர் திரு. வ. பரமசிவம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

தனிப்பட்ட அழைப்பிதழ் நாட்டு நிலைமை காரணமாக தவிர்க்கப்பட்டுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத் தருகிறோம்.

அங்கத்தவர்கள் தங்கள் நிலுவை சந்தாக்களைச் செலுத்தி உறுப்புரிமைகளை உரிமைப்படுத்தவும்.

அங்கத்தவர் தவறாமல் சமுகம் தரவும்.

**வ. பரமசிவம்,**
தலைவர்,
நல்லூர் பி. ஒ. ந. சங்கம்.

''மோகனபதி இல்லம்''
பலாலி வீதி, திருநெல்வேலி.

(44461)

---

உ
சிவமயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் தாது வருடம் மார்கழித் திங்கள் 12 ஆம் நாள் ( 1996 – 12 - 27 ) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தை,

## சிவஸ்ரீ சி. சர்வேஸ்வரக் குருக்கள்

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் தாது வருடம் மார்கழித் திங்கள் 21 ஆம் நாள் ( 1997 - 01 – 05 ) ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைபெறும்.

**தசாகம்:** மார்கழி 21 ஆம் நாள் ( 1997 - 01 - 05 ) ஞாயிற்றுக்கிழமை பகல் 10. 00 மணி.

**கிருஹயக்ஞம்:** மார்கழி 25 ஆம் நாள் (1997-01-09) வியாழக்கிழமை மேற்படி கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து தந்தையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்கனம்,
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

மயிலணி,
சுன்னாகம்.

(சி/3846)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போடோ விடுதலைப் புலிகள் இயக்கம்
# குண்டு வெடிப்புக்கு உரிமை கோருகிறது

புதுடில்லி, ஜன. 4

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் கடந்த 5 நாள்களாக இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு ''போடோ' ஆதிவாசிகளின் நலன்களின் பிரதிநிதிகள் எனக் கூறும் போடோ விடுதலைப்புலிகள் என்ற அமைப்புஉரிமை கோரியுள்ளது.

போடோ விடுதலைப்புலிகள் அமைப்பின் பரப்புரைச் செயலர் எனத் தன்னை கூறிக் கொள்ளும் நைமோ டைமாரிஎன்பவர் கையெழுத்திட்ட அறிக்கையில் இந்தக் குண்டுவெடிப்புகளுக்கு தாங்களே பொறுப்பு என உரிமை கோரப்பட்டுள்ளது.

இந்தகுண்டு வெடிப்புகளால் வடகிழக்கு இந்தியாவை இந்தியாவின்ஏனைய பகுதிகளுடன் இணைக்கும்நெடுஞ் சாலைகள் மற்றும் ரயில் போக்குவரத்துக்கள் தடைப் பட்டன.

''போடோ'' தனிநாடு வழங்கப்படவேண்டும் என்பது குறித்து இந்திய அரசு பேச்சுவார்த்தைக்குக் கூட கோடி காட்டாததால் போடோ விடுதலைப்புலிகளுக்கு தமது ஆயுதத் தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதை விட வேறு வழியில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வது எமது நோக்கமல்ல. ஆனால் வடகிழக்கு இந்தியாவுக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான ரயில் மற்றும் சாலைப் போக்குவரத்துக்களைக் குழப்புவதே நோக்கம் எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இது இந்திய அரசுக்கும் அஸாம் மாநில அரசுக்கும் மறக்கமுடியாத ஒரு பாடத்தைப் புகட்டும் என டைமாரி தெரிவித்துள்ளார்.

''போடோ விடுதலைப் புலிகள்'' ஒரு புதிய கிளர்ச்சிக் குழு ஆகும்.

போடோ இன மக்களுக்கு இந்தியாவுக்குள் ஒரு சொந்த நாடு வேண்டும் என போடோ விடுதலைப் புலிகள் கூறுகிறார்கள்.

(இ-10)

## ஹொங்கொங்கில் சுற்றுச்சூழல் பாதிப்பு

ஹொங்கொங்கில் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படுத்தும் நுரையீரல் நோய்களால் 1991இல் இருந்து இதுவரை ஏறத்தாழ 22 ஆயிரத்து நூற்றுத் தொண்ணூற்றிரண்டு பேர் இறந்துள்ளனர் என்றும் —

5 இலட்சம் பேர் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் —

அந்நாட்டு சுற்றுச் சூழல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹொங்கொங்கில் முக்கிய பகுதிகளில் நச்சுக்கலந்த வாயு 27 சதவீதம் வரை உள்ளதால் நுரையீரல் தொடர்பான நோய்களால் ஏற்படும் இறப்பு அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## குடியரசுத் தினத்திலிருந்து மானிய விலையில் உணவு

### 6 கோடி குடும்பங்கள் நன்மை பெறும்

இந்திய குடியரசு தினமான இம் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து இந்தியாவில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள 6 கோடி குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு 10கிலோ உணவுத்தானியங்களை பாதி விலையில் வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக இந்திய உணவு அமைச்சர் தேவேந்திரப் பிரசாத் யாதவ் தெரிவித்தார்.

வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மக்களை இனங்கண்டு அவர்களுக்குத் தனிக் குடும்ப அட்டைகளை வழங்குமாறு இந்திய உணவு அமைச்சு மாநிலங்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளது.

(இ-10)

## சேர்பியாவில் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது

சேர்பிய அதிபர் மிலோசவிக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன.

கடந்த ஆறு வார காலமாக கடும் குளிரையும் பொருட்படுத்தாது ஆயிரக் கணக்கான மக்கள் பெல்கிறேட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

புத்தாண்டு தினத்தன்று சுமார் இரண்டரை இலட்சம் மக்கள் பெல்கிறேட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சேர்பியாவில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

(இ-10)

## 10 இலட்சம் தொழிலாளரை மலேசியா நாடுகடத்தும்

சட்டத்திற்குப் புறம்பாகத் தொழில் புரிந்துவரும் சுமார் 10 இலட்சம் தொழிலாளர்களை கைது செய்து நாடு கடத்த மலேசிய அரசு திட்டமிட்டுள்ளது.

மலேசியாவின் சுமார் 2 கோடி சனத்தொகையில் சுமார் 10 சதவீதத்தினர் இந்தோனேஷியா, நைஜீரியா, பங்களாதேஷ், பர்மா, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பிலிப்பீன்ஸ் போன்ற நாடுகளில் இருந்து வந்த தொழிலாளர்கள் எனவும் —

சுமார் 10 இலட்சம் தொழிலாளர்கள் அரசாங்கம் வழங்கிய பொதுமன்னிப்பை பயன்படுத்திக் கொள்ளத் தவறியதாகவும் —

உரிய ஆவணங்களை அவர்கள் பெறாத காரணத்தினாலும் — அவர்கள் கைதுசெய்யப்படவுள்ளனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-10)

## உலக அரங்கில்

### இராணுவத்தை ரஷ்யா பலப்படுத்தும்?

மொஸ்கோ, ஜன. 4

ரஷ்யாவின் பாதுகாப்புக்கு வலுவான இராணுவம் அவசியம் என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ஈகோ சொரினோவ் தெரிவித்துள்ளார்.

நேட்டோவின் கிழக்கத்திய விரிவாக்கமும், தங்களது இராணுவ ஆற்றலை ஆசிய நாடுகள் உட்பட பல நாடுகள் அதிகரித்து வருவது இதற்குக் காரணமென்று அவர் தெரிவித்தார்.

ரஷ்யா மதிப்பாக நடத்தப்பட வேண்டுமாயின், அதன் இராணுவ ஆற்றல் வலுவாக இருக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

(உ-5)

பலஸ்தீனரைச் சுட்ட

## இஸ்ரேல் சிப்பாய்கள் விளக்க மறியலில்

ஹெப்ரோன் நகரில் பலஸ்தீனர்கள் மீது கடந்த செவ்வாயன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக இஸ்ரேலிய நீதிமன்றம் இரண்டு இஸ்ரேலிய படைவீரர்களை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டது.

மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் இருந்து இஸ்ரேலியப் படைகளை வாபஸ் பெறுவதற்கான உடன்படிக்கை பற்றி தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டுவருகின்றன.

அதிபர் யசீர் அரபாத் அமெரிக்காவின் விசேட தூதுவர் டெனிஸ் றொஸுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் தகவல் தருகையில் ஹெப்ரோன் தொடர்பான உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப் படும் எனத் தெரிவித்தார்.

ஆனால் பெரிதும் எதிர் பார்க்கப்படும் நத்தானியாகுவுடனான உச்சி மாநாட்டிற்கு இன்னமும் ஒழுங்குகள் செய்யப்படவில்லை என அவர் கூறினார்.

(இ-10)

சிங்கப்பூர்த் தேர்தல் முடிவுகள்

## 2 தொகுதிகளை மட்டுமே ஆளும் கட்சி கோட்டைவிட்டது

சிங்கப்பூர், ஜன. 4

சிங்கப்பூர் நாடாளுமன்றத்துக்கான 83 தொகுதிகளுள் ஆளும் மக்கள் செயற் கட்சி 47 தொகுதிகளில் போட்டியின்றித் தெரிவானது.

ஏனைய 36 தொகுதிகளுக்குமான தேர்தல் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

இத்தேர்தலில் 36 தொகுதிகளுள் 34 தொகுதிகளில் வெற்றிபெற்றதன் மூலம் மொத்தமாகவுள்ள 83 தொகுதிகளுள் 81 தொகுதிளைஅதுகைப்பற்றி மகத்தான வெற்றி பெற்றுள்ளது.

1959 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் செயற் கட்சியே சிங்கப்பூரை ஆண்டு வருகிறது. இந்தக் கட்சிக்கு தேர்தலில் 65 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன. இது கடந்த தேர்தலை விட 4 சதவீதம் அதிகம்.

(இ-10)

## கப்பலிலிருந்து பொருள்கள் இறக்க மேலும் நான்கு இழுவைப் படகுகள்

யாழ்ப்பாணம், ஜன. 4

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை துரிதமாக இறக்க வசதியாக நான்கு இழுவைப்படகுகள் (பாஜ்) வந்துசேரவிருக்கின்றன.

யாழ்.அரச அதிபர் திரு.செ. பத்மநாதன் உயர்மட்ட அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே புல்மோட்டை கனிவளக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து 4 இழுவைப் படகுகள் தருவிக்கப்படவுள்ளன.

தனியாருக்கு பொருள்கள் ஏற்றிவரும் சகல கப்பல்களும் பருத்தித்துறையில் பொருள்களை இறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

இழுவைப்படகுகள் வந்து சேர்ந்ததும் துரிதமாக பொருள்களை இறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — அரச அதிபர் தெரிவித்தார்.

பொருள்களை ஏற்றிவரும் கப்பல்கள் மாதக் கணக்கில் காங்கேசன் துறையில் காத்துக் கிடக்கும் நிலை இனி மேல் இருக்காது என்றும் —

துரிதமாக பொருள்களை இறக்குவதன் மூலம் கப்பல்கள் கொழும்புக்கு சென்று மேலும் பொருள்களை எடுத்துவர வாய்ப்பு ஏற்படும் என்றும் — தெரிவிக் கப்பட்டது.

(இ-3)

## வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் கட்டாயம்

யாழ்ப்பாணம், ஜன.4

குடாநாட்டில் உள்ள சகல வர்த்தகர்களும், ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பொருள்களின் விலைப் பட்டியலைத் தமது வர்த்தக நிலையங்களில் மக்கள் பார்வைக்காகத் தவறாது வைத்தல் வேண்டும்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இது குறித்து முடிவு செய்யப் பட்டது.

அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், யாழ்ப்பாண வணிகர் மன்றப் பிரதிநிதிகளும், யாழ்ப்பாண நுகர்வோர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதிகளும், படை அதிகாரி ஒருவரும் கலந்து கொண்டனர் என்பது தெரிந்ததே.

வர்த்தகர்கள் தங்கள் கையிருப்பில் உள்ள பொருள்களின் விவரங்களையும், பொருள்களைக் களஞ்சியப்படுத்தியுள்ள இடங்கள் குறித்தும் மாதந்தோறும் அரச அதிபருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

(அ)

## நூல் வெளியீடு

சண்டிலிப்பாய் ஜன. 4

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலுவலகம் ''இலங்கையில் தமிழர் பாரம்பரிய பிரதேசம் விவசாய வளமும் பயன்படும்'' என்ற நூலை அண்மையில் வெளியிட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரும், புற நிலைப் படிப்புகள் அலுவலக இணைப்பாளருமான இரா. சிவச்சந்திரன் இந்த நூலை எழுதியுள்ளார்.

(இ-135)

## சேற்றில் புதைக்கப்பட்டிருந்த 357 கிலோ போதைவஸ்து

கொழும்பு, ஜன. 4

உரப்பைகளில் போடப்பட்டு சேற்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த போதைவஸ்துவைப் பொலீஸார் கைப்பற்றினர்.

மாரவிலப் பகுதியில் துகுவாவில் என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

357 கிலோ போதைவஸ்தே சேற்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் சந்தை விலை 17 கோடி 85 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாகச் சிலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

(இ-3-150)

## திருநெல்வேலிச் சம்பவம் குறித்து இராணுவ வட்டாரங்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 4

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதல் சம்பவம் குறித்து இராணுவ வட்டாரங்கள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.

அந்த அறிக்கை வருமாறு:-

தொடர்ந்தும் இரண்டாவது முறையாக புலிகள் இயக்கத்தினரால் மேலும் பல அப்பாவி உயிர்கள் இம்மாதம் 2 ஆம் திகதி பலிகொள்ளப் பட்டுள்ளன.

அது யாழ்ப்பாண மக்களுக்காக 1997 ஆம் ஆண்டுக்காக புலிகளால் வழங்கப் பட்ட முதல் பரிசாகும்.

சில தினங்களுக்கு முன்னர் தாவடியில் குண்டுவெடித்து அப்பாவிப் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டும் நான்குபேர் காயமடைந்தும் உள்ளதுடன், இன்றும் (2-1-1997) திருநெல்வேலிப் பிரதேசத்தில் கிளைமோர் குண்டு ஒன்று வெடித்ததால் அப்பாவிப் பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

( 6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**St. Peter's Trimmer Hall Nursery**
பரி. பேதுரு றிம்மர் மண்டபம்
பாலர் பாடசாலை
மீண்டும் இயங்க உள்ளது.
(இரண்டாம் குறுக்குத் தெருவில்)
அனுமதி கோருவோர் **14 - 01 - 97** - க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.
முகாமைக் குரு,
சொலமன் ஹவுஸ்,
120, இரண்டாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(44485)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். ரெலிகொம் தொலைத் தொடர்பு பரிசோதகர்,
**யூலியஸ் மரியதாஸ்**
அவர்களின் சகோதரர்
**அன்ரன் ராஜ்குமார்**
அகால மரணமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.
ரெலிகொம் ஊழியர்கள்
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி மக்கள் வங்கியின் முகாமையாளரும்,
ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின்
முன்னாள் முகாமையாளருமாகிய
**திருவாளர் ஏ. இராசபூபாலசிங்கம்**
அவர்களின் திடீர் மரணச் செய்திகேட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினர், வங்கியாளர், நண்பர்கள் ஆகியோருடன் நாமும் பங்குகொள்கின்றோம்.
உதவி பொது முகாமையாளரும்,
சக ஊழியர்களும்.
மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.
(சி/3853)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களான
**செல்வன் பே. ஸ்ரீநிவாசன்**
**செல்வன் து. பிரதீஸ்**
ஆகியோரின் அகால மறைவையொட்டி அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்.
**யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.**
(44492)

## காணவில்லை

**நவரத்தினக்குருக்கள்**
**கோணேஸ்வரக்குருக்கள்**
**(ரமணன் ஐயா)**



வயது 26. சென்ற **09 - 08 - 1996** அன்று கொடிகாமம் - யாழ்ப்பாணம் வரும் வழியில் காணாமற்போயுள்ளார். இவர்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு அறியத் தரவும்.

தகவல்:
ந. யோகீஸ்வரி
யோகவாசா, நெல்லண்டை,
பருத்தித்துறை.
ந. கேதீஸ்வரி
[44479]

## திருநெல்வேலிச்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைவிடவும் நான்குபேர் காயமடைந்த நிலையில் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அதில் ஓர் இளைஞர் கவலைக்கிடமான நிலையில் உள்ளார். யாழ். பலாலி பிரதான வீதியில் இக்குண்டு வெடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தை அண்மித்த வீடுகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் நோக்குடன் இவ்வாறு அப்பாவித் தமிழ் மக்களைக் கொலை செய்வது என்ன குறிக்கோளுடன்?

பாதுகாப்புப் படையினர் யாழ்ப்பாண மக்களை பாதுகாத்து அவர்களுக்குச் சமாதானம் நிறைந்த புத்தாண்டுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, பயங்கரவாதிகள் இவ்வாறு குண்டுகளை வெடிக்கச் செய்து அந்த மக்களைக் கொலை செய்வதன் உள்நோக்கம் என்னவென யாழ்ப்பாண மக்களுக்குக் கடும் பிரச்சினை எழுந்துள்ளது.

காலை வேளையில் பாடசாலைக்குச் செல்வதற்காக வருபவர்களோ, அன்றாட தேவைகளுக்காக யாழ்ப்பாணத்திற்குச் செல்வோரே இவ்வாறு கொலை செய்யப்படுவது மிகவும் மிருகத்தனமான நடவடிக்கையென மக்கள் குறிப்பிட்டனர்

உலகம் முழுவதும் 1997 ஆம் ஆண்டை விருப்புடன் கொண்டாடுகையில் யாழ்ப்பாண மக்களுள் மட்டும் பயத்தை உருவாக்குவதன் மூலம், யாழ்ப்பாண மக்களது வாழ்கையை மீண்டும் இருண்டதாக மாற்றுவதற்கு அவர்கள் எதிர்பார்த்துள்ளதாக இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் தெளிவாகின்றது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கின் கள...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைச்சர் கூட அங்கு செல்ல முடியவில்லை.

அவர் வருவார் என்று யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகள் சீருடையை வழங்காமல்வைத்திருந்தனர். ''கல்வி அமைச்சரை இங்கு அழைத்து பலியிட நினைக்கிறீர்களா?'' என்று இராணுவத்தினர் யாழ். கல்வித் திணைக்களத்தினரை எச்சரித்தார்களாம்,

இப்போது கிழக்கு மாகாணச் சூழ்நிலையும் 'நிலவரம் இங்கு வழமைதான்' என்று அரசாங்கம் சொல்ல முடியாதளவுக்குக் கட்டுமீறிப் போய் விட்டது.

மேலும் போர்க்கள நிலைவரம் கிழக்கில் கடுமையாகச் செல்லும் என்பதை மிகத் தெளிவாக அறிய முடிகிறது.

புலிகளின் தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்களும், படையினரின் தற்பாதுகாப்பு நகர்வுகளும் உண்மையான பாடும் மீன்களையும் அச்சமூட்டப் போகின்றன.

பாடப்போவது மீன்களல்ல, துப்பாக்கிகள்தான்! 97 ஆம் ஆண்டில் கிழக்கில் தான் கள நிலவரங்கள் கடுமையாக மாறப் போகின்றன. ★

**புலமைப்பரிசில்**
பயிற்சிப் பரீட்சை
**05-01-1997** ஞாயிறு
வழமைபோல் நடைபெறும்.
**Bond Institutes**
யாழ்ப்பாணம்.
(44488)

# பிரதேச செயலகங்கள் மூலமே இம்மாதம் முதல் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஜன,4

யாழ். மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்கள் தமது கொடுப்பனவு மற்றும் தொடர்புகள் யாவற்றையும் இம்மாதம் முதல் அந்த அந்த பிரதேச செயலர்கள் மூலமாகவே மேற்கொள்ள வேண்டும் என்று யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

ஓய்வூதியர்கள் தாம் விரும்பிய இடங்களுக்கு அவர்களின் ஓய்வூதியக் கோவைகள் யாவும் அனுப்பப்பட்டு விட்டன என்று—

இம்மாதம் முதல் ஓய்வூதியம் வழங்க நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஓய்வூதியம் பிரதேச செயலகங்களால் வழங்கப்படும் என்றும்— தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் ஓய்வூதியக் கிளை மூடப்பட்டுவிட்டதால், ஓய்வூதியம் தொடர்பாக செயலகத்துக்கு வந்து ஓய்வூதியர்கள் அலைய வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

வெளிமாவட்டங்களுக்கு ஓய்வூதியத்தை மாற்றுமாறு கோரியவர்களின் கோவைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும்—

அவை கப்பல் மூலம் அங்கு அனுப்பப்படவுள்ளன என்றும் — அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# கோப்பாய் பகுதிக்கான விசேட அடையாள அட்டை

சுொழும்புத்துறை, ஜன. 4

வலிகிழக்கு பிரதேசசெயலர் பிரிவில் இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்மேற்கு, ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இருபாலை சந்திக்கருகாமையிலும் —

வளலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தமேனி, அச்சுவேலிவடக்கு, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால்மேற்கு, புத்தூர் வடக்கு, நவக்கிரி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் ஆவரங்கால் மேற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிறுகாலை 10-00 மணி தொடக்கம் வழங்கப்படவுள்ளன என கோப்பாய் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-30)

## கலப்பதி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு, ஜன. 4

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து அந்த முன்னணியின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரான நிஹால் கலப்பதி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம்எதிர்வரும் 6 ஆம் திகதி விசாரணை நடைபெறும் என அறிவித்துள்ளது.

நீதியரசர்கள் ஜி. பி. எஸ். டி. சில்வா, பி. இராமநாதன், ஷிராணி பண்டாரநாயக்கா ஆகியோர் முன்னிலையில் வழக்கு விசராணை நடைபெறும். (இ-3-150)

# சிங்கள பாதுகாப்புச் சங்கம் இந்தியா மீது கண்டனம்

கொழும்பு, ஜன. 4

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை இந்தியா வரவேற்றதை சிங்களபாதுகாப்பு சங்கம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

ஜனாதிபதி இந்தியா சென்ற சமயம் இந்தியப் பிரதமர் தேவகௌடாவிடம் பேசிய போது, ஜனாதிபதியின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை வரவேற்பதாக இந்தியா கூறியுள்ளது என்றும் —

இது குறித்து இந்தியா கண்டிக்கப்பட வேண்டியது என்றும் — அச்சங்கம் கூறியுள்ளது.

இனப்பிரச்சினை விடயத்தில் 3 ஆம் தரப்பு தேவையில்லை என்று இந்தியா கூறிய கருத்து வரவேற்கத் தக்கது என்றும் அச் சங்கம் தெரிவித்தது. (இ-3-150)

## போட்டோ பிரதி இயந்திரம்

யாழ். பிராந்திய சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு புதிய போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று கிடைத்துள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு இதனை அண்மையில் இப்பணிமனைக்கு வழங்கியது. (இ-135)

## இந்து அறநெறி பாடசாலைகளின் போட்டி

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே மாவட்ட மட்டத்தில் இந்து சமய அறிவுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தவிருக்கும் இப் போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் (பெப்ரவரி) 23 ஆம் திகதி நடைபெறும்.

இப் போட்டிப் பரீட்சை குறித்த விவரங்களை யாழ். செயலகத்தில் இயங்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில், இந்து அறநெறிப் பாடசாலைகளின் அதிபர்கள் பெற்றுக்கொள்ளலாம். (அ-30)

**YARL HALL கல்வி நிலையம்**
93, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
★ ஆண்டு 4 முதல் O/L வரை புதிய பிரிவு வகுப்புகளும்
★ விசேட சிங்கள, ஆங்கில வகுப்புகளும்
ஆரம்பம்: 5 - 1 - 1997 காலை 9-00 மணி
(44494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விலைகள் மாறவில்லை

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களில் மிகப் பெரும்பாலானவை அரச துறையினராலும் தனியார் துறையினராலும் முழுக்க முழுக்கக் கப்பல் மூலமே தருவிக்கப்படுகின்றன. கப்பல் ஓடாவிட்டால் யாழ்ப்பாண மக்கள் பட்டினி கிடக்க நேரிடும் என்ற நிலை.

ஆனால் —

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சரக்குக் கப்பல்களை கூடிய எண்ணிக்கையில் சேவையில் ஈடுபடுத்தி பாவனைப் பொருள் தருவிப்பில் உள்ள இடநெருக்கடியையும், காலதாமதத்தையும் நீக்குவதில் அரசாங்கம் இன்னும் கவனம் செலுத்தவில்லை. காங்கேசன், பருத்தித்துறை துறைமுகங்கள் பல கப்பல்களைக் கையாளக் கூடிய நிலையில் இல்லை என்று அரசு சாட்டுச் சொல்லவும் கூடும்.

ஆகையால் குடாநாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களை விரைவாகவும் ஒழுங்காகவும் கொண்டு வந்து சேர்ப்பது என்பது பெரும் சங்கடமான, கஷ்டமான விடயமாகி விட்டது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கப்பல்களில் கொண்டு வரப்படும் பொருள்கள் அளவிலும் தொகையிலும் குறைந்தும்சேதமடைந்துமே தமக்குக் கிடைப்பதாக தனியார் வர்த்தகர்கள் முறைப்படுகிறார்கள்.

அதில் ஓரளவு உண்மை இருப்பினும், அதனைக் காரணம் காட்டி பொருள்களின் விலையைப் பலமடங்கு கூட்டி விற்பதற்கு மேற்படி முறைப்பாடு பயன்படுத்தப் படுகிறது என்பதே பொது மக்களின் பரவலான கருத்தாக உள்ளது.

இத்தகைய ஒரு கேள்வியையே செயலக அதிகாரிகளும் யாழ்ப்பாணம் வணிகர் மன்றத்திடம் கேட்டிருந்தனர். ஆனால் செயலக அதிகாரிகளும் இந்த விடயத்தில் மக்கள் நலன் நாடி உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் போதிய அக்கறை காட்டவில்லை என்ற கருத்தும் மக்களிடையே நிலவுகிறது.

பொருள்களைக் கப்பல் மூலம் தருவிப்பதில் சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள், செயலக அதிகாரிகள், படையினர் ஆகிய முத்தரப்பினரும் ஒருவரை மற்றவர் குற்றஞ்சாட்டாமல் மக்கள் நலன் நாடிச் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மீளக் குடியமர்வதற்கு முன்னர் கொடுத்த அதே விலைகளுக்கே இன்னமும் பொருள்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்பதனை மக்கள் சார்பில் இங்கு வலியுறுத்த விரும்புகின்றோம்.

கொழும்பில் இருந்து கொண்டுவரப்படும் பொருள்களின் விலைகள் மூன்று அலகுகள் கொண்டதாக இருக்க வேண்டும். அதாவது கொழும்பில் கொடுத்த கொள்விலை, அதனை எடுத்து வருவதற்கான கட்டணம் (பிற நானாவித செலவுகள் உட்பட) வர்த்தகர்களுக்குரிய குறிப்பிட்ட நியாயமான லாபம் ஆகிய மூன்று அலகுகளும் சேர்த்தே விலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

அத்தகைய ஒரு வழிமுறை உரிய வகையில் கடைப்பிடிக்கப்பட்டால்,பாவனைப் பொருள்களுக்கு மக்கள் 500, 600 சதவீதம் வரை அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை இருக்காது. இதற்கு முத்தரப்பினரதும் ஒத்துழைப்புத் தேவை.

# கல்விச் சீர்திருத்தம் காரணமாக 539 பாடசாலைகளுக்கு மூடுவிழா

கொழும்பு ஜன. 4

இவ்வருடம் அமுலுக்கு வந்துள்ள கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் 539 பாடசாலைகள் மூடப்படவிருக்கின்றன.

சிதறிப் போயிருக்கும் வளங்களை ஒன்றிணைக்கும் நோக்குடனேயே இவற்றுக்கு மூடுவிழா நடத்தப்படுவதாக கல்வி, உயர்கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து மாகாணக் கல்வியமைச்சுக்கு விரைவில் அறிவிக்கப்படும்.

மூடப்படும் பாடசாலைகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

இந்தச்செயலை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எதிர்த்துள்ளன.

கிராமப் புறங்களில் உள்ள மாணவர்கள் பல மைல் தூரம் நடந்து சென்றே கல்வி பயில வேண்டிய நிலை ஏற்படுவதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

## 16,200 மாணவர்கள் பல்கலைக்கு அனுமதி

பல்கலைக் கழகங்களுக்கு இவ்வருடத்துக்கு 16 ஆயிரத்து 200 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1995ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 26 ஆயிரம் பாடசாலை மற்றும் தனிப்பட்ட மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் சேர்வதற்குரிய மாவட்ட அடிப்படையிலான ஆகக்குறைந்த புள்ளி விவரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

பல்கலைக்கழகத்தில் சேர்வதற்குத் தகுதிபெற்றவர்களில் 40 சதவீதமானவர்கள் நாடளாவிய ரீதியில் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

55 சதவீதமானோர் மாவட்ட அடிப்படையிலும் 5 சதவீதமானவர்கள் பின்தங்கிய மாவட்ட அடிப்படையிலும் தெரிவுசெய்யப்படுவர்.

22 பாட நெறிகளுக்கென 25 மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படவிருக்கின்றனர்.

## இரு கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்படுகின்றன

வடமராட்சி, ஜன. 4

மாஹோ கப்பலில் உள்ள எஞ்சிய பொருள்கள் இன்னமும் மூன்று நாள்கள் கழித்தே இறக்கப்படவுள்ளன.

நேற்றுவரை மாஹோ கப்பலிலிருந்த விதை உருளைக் கிழங்கு, கறி உருளைக்கிழங்கு கூரைத் தகடுகள் என்பன இறக்கப்பட்டன.

அத்துடன் டோனாகுளி என்ற கப்பலிலிருந்தும் தனியாருக்கு வந்து சேர்ந்த பொருள்களும் நேற்று இறக்கப்பட்டன.

இன்று சனிக்கிழமை முதல் பருத்தித்துறை துறைமுகத்தில் டோனாகுளி என்ற கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்படும். இப்பொருள்கள் இறக்கி முடிக்க மூன்று தினங்கள் ஆகலாம் என்றும் அதன் பின்னரே மாஹோ கப்பலில் உள்ள பொருள்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் காலநிலை சீரின்மை, கடற்கொந்தளிப்பு ஆகியவற்றால் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கும் பணி நடைபெறவில்லை. (இ-173)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன. 4

கரவெட்டி, பரலோக அன்னைஆலயத்தில் குழந்தை யேசு திருநாள் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நாளை 5 ஆம் திகதி முதல் மாலை 5 மணிக்கு குழந்தை யேசு வழிபாடும் 13 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் இடம் பெறும். (இ-4)

## துப்பாக்கி சூட்டுக் காயத்துடன் சடலங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 4

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று சுன்னாகம் பொலீஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

சடலங்கள் பிரேத பரிசோதனையின் பின்னர் மீண்டும் பொலீஸாரால் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன. (இ-15)

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்கள் சிபார்சு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக மூன்று பேரின் பெயர்களை யாழ். பல்கலைக்கழகப் பேரவை நேற்று சிபார்சு செய்தது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழகப் பேரவை நேற்றுக் காலை கூடியது.

தற்போதைய பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம், விவசாயபீடாதிபதி பேராசிரியர் அ. நவரத்தினராசா ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன.

வாக்கெடுப்பின்போது பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளைக்கு 27 வாக்குகளும், பேராசிரியர் கணேசலிங்கத்துக்கு 18 வாக்குகளும், பேராசிரியர் நவரத்தினராசாவுக்கு 15 வாக்குகளும் கிடைத்தன.

இந்த மூவரின் பெயர்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட உள்ளன. (இ-3)

## பிரதேச செயலக செயற்பாடு அறிக்கை அமைச்சரிடம்

கொழும்பு, ஜன. 4

பிரதேச செயலக நிர்வாக செயற்பாடு பற்றிச் சிபார்சு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பணிமனைகளில் மேற்கொள்ளப்படும் பணிகளை மேலும் சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டிய சிபார்சுகளை முன்வைப்பதற்கு இக்குழு நியமிக்கப்பட்டது.

13 ஆவது அரசமைப்புத் திருத்த சட்டத்தின் பிரகாரம் மக்களுக்குப் பெரிதும் நன்மை பயக்கவுள்ள மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பிரதேச செயலர் ஊடாக நடைமுறைப்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும்.

பிரதேச செயலர்களின் அதிகாரங்களைக் குறைக்காமல் இருத்தல், செயலாளர் காரியாலயங்களின் கட்டடங்களையும் உபகரணங்களையும் தகுந்த முறையில் பேணல், பிரதேச செயலாளர் இலங்கை நிர்வாகசேவையில் முதலாம்தர உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல் இந்த நியமனங்களின் போது நிபுணத்துவத்தையும், அனுபவத்தையும் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளித்தல் போன்ற 15 சிபார்சுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிபார்சுளில் பெரும்பாலானவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஏற்கனவே இணங்கியுள்ளார் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3)

## நாளை

**மார்கழி 21**

ஞாயிற்றுக்கிழமை

**திதி:** ஏகாதசி

பிற்பகல் 4.49 வரை.

**நட்சத்திரம்:** விசாகம்

பிற்பகல் 4. 55 வரை.

**ராகுகாலம்:** 5.01 - 6.31

சுபநேரம்: 9.31 - 11.01

(... பழைய நேரப்படி)

## நுளம்புகள் நடத்தும் சித்திரவதை

இப்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்களுக்குள்ள எல்லாத் தொல்லைகளையும் விடப் பெரிய தொல்லையாக உருவெடுத்திருப்பது நுளம்புக்கடியே. காலை பகல், மாலை, இரவு என்றில்லாமல் 24 மணி நேரமும் நுளம்புகள் மக்களைச் சித்திரவதை செய்கின்றன. குடாநாட்டின் சகல வீடுகளும், குடியிருப்புகளும், அலுவலகங்களும் சித்திரவதைக் கூடங்களாக மாறியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தற்போது நுளம்புப் பெருக்கம் அதிகளவில் உள்ளதே இதற்குக் காரணமாகும். வலிகாம இடம்பெயர்வின் பின் மக்கள் மீளக்குடியமர்ந்து எட்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் சுற்றம் சூழல் பராமரிப்பு இல்லாமையால் நுளம்புகள் அபரிமிதமாகப் பெருகி மலேரியா தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு வந்துள்ளது,

முன்பு, மலேரியா தடுப்பியக்கத்தின் மூலம் மலத்தியோன் தெளிக்கப்பட்டு ஓரளவுக்கு நுளம்புகளின் தாக்கம் குறைக்கப்பட்டது. ஆனால் இடைக்காலத்தில் மலத்தியோனை இங்கு கொண்டுவருவதற்கு இருந்த தடை காரணமாக, நுளம்பு ஒழிப்புப் பணிகள் பூரண பயனைத் தரவில்லை.

தற்போது மலத்தியோன் கொண்டு வரத் தடையில்லை என்பதால் போதியளவுக்கு மலத்தியோன் கொண்டு வந்து தெளிக்கப்பட்டால் நுளம்புகளின் பெருக்கத்தை ஓரளவுக்கு குறைக்க முடியும். இதன் மூலம் மலேரியாநோய் தாக்கத்தையும் குறைக்க முடியும். சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான முயற்சிகளில் முழு மூச்சுடன் இறங்கி மக்களைக் காப்பாற்ற வேண்டும். அது அவர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

சி. வித்தியாபதி

புத்தூர்.

## வாசகர் திருமுகம்

## காங்கேசன் மக்கள் வங்கிக் கிளை

மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளை 1990ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதியில் இருந்து முதலில் யாழ்ப்பாணத்திலும் இப்போது சுன்னாகத்திலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. முதல் பெயர்வின்போது சில முக்கிய பேரேடுகளை எடுத்துவராது வங்கிக் கட்டடத்திலேயே அதிகாரிகள் விட்டுவிட்டு வந்திருந்தனர். இதனால் வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை மீளப்பெற சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

பணம் பெறவேண்டின் கணக்குகள் புனரமைக்கப்பட்ட பின்னரே பெறமுடியும். இந்தப் புனரமைப்பு வேலைக்குப் பல விண்ணப்பப் படிவங்களை நிரப்ப வேண்டும். அத்தோடு அதற்கான முத்திரைச் செலவு வேறு. அந்த விண்ணப்பங்களில் சமாதான நீதிவானிடம் (J. P) கையெழுத்துப் பெற பல படிகள் ஏறி இறங்க வேண்டும். இப்படி பல விதமான கஷ்டங்களை வாடிக்கையாளர்கள், மக்கள் அனுபவித்து வருவது மற்றவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

காங்கேசன்துறையில் இருந்து இடம்பெயர்ந்த பின்னர் வங்கிக்கட்டடத்திற்குள் இருக்கும் பேரேடுகளை எடுத்து வருவதற்கு எதுவித நடவடிக்கையும் அப்போது எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை; தகவல் இல்லை.

இருப்பினும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இப்பிரதேசங்கள் வந்தபின்னரும், விட்டுவிட்டு வந்த ஆவணங்களை எடுப்பதற்குரிய நடவடிக்கைகளை வங்கி நிர்வாகம் இன்னும் மேற்கொள்ளாதது ஏன்?

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையை அதே இடத்தில் திறக்கமுடியும் என்றால், கப்பலில் வரும் பொருள்களை காங்கேசன்துறை சென்று எடுத்துவர முடியுமென்றால், அங்கிருந்து வங்கி ஆவணங்களை எடுத்துவந்து மக்கள் கஷ்டங்களைக் குறைக்க முடியாதா? இது விடயத்தில் வங்கி நிர்வாகம் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிப்பது ஏன்?

சம்பந்தப்பட்ட அதிகாரிகள்உரிய பதில் தருவார்களா?

உதயா

தையிட்டி மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகதமிழ் பண்பாட்டு இயக்கம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளையின் விசேட கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள யாழ். விக்னா கல்வி நிலையத்தில் இயக்கத்தின் தலைவர் ஆ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-30)

# சர்வதேச தொண்டர் அமைப்புகள்: அரசு கண்காணித்து வருகின்றது

இலங்கையில் இயங்கும் சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் செயற்பாடுகள் இரு அமைச்சுக்களால் கண்காணிக்கப்படுகின்றன என்று கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவிக்கிறது.

சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் தேசிய செயலகம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இந்த செயலகம் மூலம் தொண்டர் அமைப்புக்கள் கண்காணிக்கப்பட்டுவருகின்றன.

இந்த அமைப்புக்களுக்கு எவ்வாறு நிதி கிடைக்கிறது? பெருந்தொகையான நிதியைப் பெற என்ன காரணம் தெரிவிக்கப்படுகிறது? என்பன குறித்து கண்காணிப்புச் செய்யும் அமைச்சுக்கள் ஆராய்கின்றன என்று பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது.

இலங்கையில் பணியாற்றும் சகல சர்வதேச தொண்டர் நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் சட்டம் கொண்டுவர விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதற்காக விசேட கண்காணிப்பு அமைப்பு ஒன்றை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என பல அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்கள் அரசுக்கு நெருக்குதல் கொடுப்பதுடன் பிரசாரமும் செய்கின்றன.

லண்டனில் உள்ள அரச சார்பற்ற அமைப்பு ஒன்று விடுதலைப் புலிகளுடன் பேசுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க பிரதிநிதி ஒருவரை அனுப்பியது.

இந்தப் பிரதிநிதியின் இலங்கை வருகைக்கு முக்கிய பங்கு வகித்தவர் கொழும்பில் உள்ள ஓர் அரச சார்பு அமைப்பின் முக்கிய பிரமுகர் என்று கூறப்படுகிறது.

இப்படி அச்செய்தியில் மேலும் தெவிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னராணி கருணாரட்ணம்

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த திருமதி அன்னராணி கருணாரட்ணம் 3-01-97 இல் காலமானார்.

இவர் சி. கருணாரட்ணம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், உதயன்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. திருமதி இராஜேந்திரம் - பாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், திருமதி சி. கலைச்செல்வியின் (லண்டன்) அன்புத் தாயாரும், சு. சிவகுமாரின் (சாந்தன் - லண்டன்) அன்பு மாமியாரும், டிவர்சனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-1-97) சனிக்கிழமை 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
**சி. கருணாரட்ணம்**
(கணவர்)

74, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3860)

### திருமதி அழகரெத்தினம் இராசமணி

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரெத்தினம் இராசமணி நெடுங்கேணியில் (18-12-1996) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரெத்தினத்தின் அன்பு மனைவியும், சர்வேஸ்வரன் (இலங்கை மின்சார சபை), நகுலேஸ்வரன், புஸ்பலீலா, கணேஸ்வரன், இந்திரலீலா ஆகியோரின் தாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**மகள்.**

2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(44477)

### திருமதி கனகம்மா மருதலிங்கம்
**(சிங்கப்பூர் அம்மா)**

நவாலியூரை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட, முன்னாள் பிரபல சமூகசேவகியான திருமதி கனகம்மா மருதலிங்கம் (சிங்கப்பூர் அம்மா) 01-01-1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்ஷனியர் மருதலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவலிங்கம் (D.O.A., Highways) மற்றும் திருமதிகள் மகேஸ்வரி, கமலேஸ்வரி, கமலாதேவி, மதனராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பூலோகராணி (ராணி), காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, கந்தையாபிள்ளை மற்றும் சரவணபவன், பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02-01-97 அன்று திருநெல்வேலியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
**சீ. சரவணபவன்**

''ராஜஸ்தான்''
சிவராசா அவென்யூ,
திருநெல்வேலி.
(44490)

### தம்பிஐயா நவமணி
**(இளைப்பாறிய யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்)**

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர் தம்பிஐயா நவமணி வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி, சின்னம்மாவின் அன்பு மகளும், யோகராசா (பச்சடி) (யாழ். போதனா வைதியசாலை), வரதராசா (மின்சாரப்பகுதி, யாழ். மாநகரசபை), சௌந்தரராசா (பிரான்ஸ்), யோகமலர் (பிரான்ஸ்), பூமலர், சாந்தமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், மிக்கேல் (பிரான்ஸ்), சுமதி (பிரான்ஸ்), சோதி (வவுனியா), கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற காராளசிங்கத்தின் அன்பு மகன் ஆகியோரின்அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
**பச்சடி யோகராசா (மகன்)**
(யாழ்.போதனா வைத்தியசாலை)

திருமகள்வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(44498)

**மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்**

## யாழ்.நகரப்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரியவந்தது.

இதே போன்று வீதியோரங்களில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்களும், படையினரின் உத்தரவின் பேரில் தமது வீடுகளில் இருந்து வீதிக்குவரும் மரங்களையும் பூஞ்செடிகளையும் நேற்று வெட்டி அகற்றினர்.

திருநெல்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் வெடித்த கிளைமோர் கண்ணிவெடி மரத்தில் குழை மறைப்புக்குள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று படை வட்டாரங்கள் கருதுவதாகவும்—

அதனாலேயே வீதி ஓர மரங்களையும் கொப்புகளையும் வெட்டுமாறு வீட்டுச் சொந்தக்காரர்களையும், மாநகர சபையினரையும் பணித்ததாகவும் சொல்லப்பட்டது. (அ-4)

## ஜெயலலிதா ...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

50 ஆயிரம் ரூபாவுக்குச் சொந்தப் பிணையும் அதே தொகைக்கு உத்தரவாதமும் அளிக்கவேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

செல்வி ஜெயலலிதா சென்னையில் தங்கியிருக்க வேண்டும் என்றும் சாட்சியங்களைக் கலைக்கக் கூடாது என்றும் தமது உத்தரவில் நீதிபதி கூறினார்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கியது சம்பந்தமான வழக்கில், சென்ற 7 ஆம் திகதி ஜெயலலிதா கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டார்.

இதற்கிடையே ரான்ஸி நில வழக்கில் செல்வி ஜெயலலிதா முன்னாள் அமைச்சர் முகமது ஆசிவ் இந்த நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீநிவாசன் ஆகியோர் சென்னை பெருநகர முதன்மை அமர்வு நீதிபதி திரு. ஏ. இராமமூர்த்தி முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்கள், இந்தவழக்கு 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கில் கைதுசெய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் கண்ணப்பனையும் பிணையில் விடுவிக்க நீதிபதி நேற்று உத்தரவிட்டார். (இ-3-4)

## காங்கிரஸ்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சரும் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினருமான ராஜேஸ் பைலட் அறிவித்தார்.

காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைமைப் பதவிக்கு ஏகமனதான தேர்வு தேவை என்று 189 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்ததாக முன்னதாக டாக்டர் மன்மோகன் சிங் கூட்டத்தில் தெரிவித்தார்.

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் கூட்டத்தில் பேசிய சீதாராம் கேசரி மக்களவையில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக சரத்பவார் செயற்படுவார் என்று அறிவித்தார். இந்திய ஐக்கிய முன்னணி அரசுக்கு தமது கட்சி தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அவர் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராஜேஸ் பைலட் கட்சியின் நலன் கருதியே தான் போட்டியிட விரும்பியதாகவும் பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பத்துக்கு இணங்க போட்டியி [illegible] (இ-4)

## கைதான...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

வெல்லாவெளி அதிரடிப் படை முகாம் சம்பந்தமாகச் செய்தி ஒலிபரப்பானதைத் தொடர்ந்து —

இஷினி விக்கிரமசிங்கா சில தினங்களுக்கு முன்னர் நடுச்சாமத்தில் இரகசியப் பொலீஸாரினால் பல மணி நேரம் விசாரிக்கப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டார்.

இவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். இதனை பத்திரிகையாளர் சங்கங்கள் கடுமையாக ஆட்சேபித்ததோடு —

பத்திரிகையாளர்களைப் பயங்கரவாதச் சந்தேக நபர்களாகப் பார்க்கும் போக்கையும் கண்டித்தன.

இது தொடர்பாக வியாழக்கிழமையன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிந்திய பத்திரிகையாளர் மாநாட்டில், பத்திரிகையாளர்கள் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவிடம் முறையிட்டதோடு அவர்களில் சிலர் அன்றைய மாநாட்டில் இருந்து வெளிநடப்புச் செய்ததும் தெரிந்தவையே.

## தமிழக...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலை தொடருமானால் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படலாம். இலங்கை அரசு பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கவேண்டி வரும்.

இலங்கைக் கடற்படையினரின் செயல் தமிழகத்தில் கொந்தளிப்பான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. இது ஆபத்தான நிலையைத் தோற்றுவிக்கும்.

இது குறித்து இலங்கை அரசிடம் உறுதியாகப் பேசும்படி இந்தியப் பிரதமர் தேவகௌடா மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் ஐ.கே. குஜ்ரால் ஆகியோரை நான் வலியுறுத்தியுள்ளேன் — என்றார். (அ-4-10)


**01-01-97 முதல்**

**மீண்டும் ஆரம்பம்**

**புதிய வெளியீடுகளுடன்**
(முன்னைய இடத்தில்)

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
**234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

வாடிக்கையாளர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

(44496)



**வடமராட்சி றோட்டரக் கழகம்**
**Rotaract Club of Vadamaradchy**
**பருத்தித்துறை அறிவோர் கூடல்**
ஆதரவில் நடத்தும்
**திரு. இர. சந்திரசேகர சர்மா**
அவர்களின்
விஞ்ஞான விவசாய நூல்

**களைகள்**
**'KALAIKAL'**
**(WEEDS)**

★ வெளியீட்டு விழாவுக்கும் ★ களைகள் கண்காட்சிக்கும்
★ புத்தகக் கண்காட்சிக்கும்

**அன்புடன் அழைக்கின்றோம்.**

**05-01-1997 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9-30 முதல் 1-00 மணி வரை**
பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி கட்டட மேல்மாடி

(சி/3859)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04 - 01 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org